(1) அறிவிப்புகள். (தொடர்ச்சி)

(ஆ) திரு.ஜே. பி. யின் உடல்நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்திய நாடு முழுவதும் வருந்துகின்ற அளவிற்கு, நம் அத்தனை பேரின் உள்ளத்தையும் வாட்டுகின்ற அளவிற்கு ஒரு துக்ககரமான செய்தி வந்து இருக்கிறது. அது இந்த நாட்டின் தியாகி ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் மறைந்து விட்டார்கள் என்ற துக்ககரமான செய்தி ஆகும். எனவே, பேரவையின் இதர அலுவல்களை இன்று இத்தோடு ஒத்திவைக்கிறேன். பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(5) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

125. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலான, 1976 ஆம் ஆண்டு நாடாளுமன்ற, சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் எல்லை வரையறை ஆணையில் திருத்தமொன்று செய்வது குறித்து, இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவின் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் தேதியிடப் பெற்ற 282/T.N/S.C-S.T.78 ஆம் எண் ஆணையில் வெளியான அறிவிப்பு (1976 ஆம் ஆண்டு அரிசனங்கள், பழங்குடியினர் ஆணைகள் (திருத்த) சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 108/1976) 8 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 79. கோரிக்கை எண். 28—சமுதாய வளர்ச்சி — ஊராட்சி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

* 80. சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த நிதி இணைப்பு வெளியீடு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

---

* 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ஆம் நாள் அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.